# IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE OF SALEM

O.P. No. 111/2024

Deposition of PW1 witness of Plaintiff/Petitioner/ Defendant /Respondent Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X 1872 on the 19th day of August 2025.

Name : S.K.மணிவாணன் Taluk :

Father's Name: கந்தசாமி Calling:

Village : Age:

Date : 19.08.2025

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். உண்மையானவைகள் தான். அதில் கண்டுள்ள கையெழுத்து என்னுடையதுதான். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்கிறேன்.

| | | |
|---|---|---|
| 1 | 29.10.2023 | சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி அருள்ஜோதி மல்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனையில் பெற்ற மருத்துவ சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ-1. |
| 2 | 08.11.2023 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் இறப்பு சான்று கணினி நகல் வா.சா.ஆ-2. |
| 3 | 23.11.2023 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் வாரிசு சான்று கணினி நகல் வா.சா.ஆ-3. |

| | | |
|---|---|---|
| 4 | 14.03.2020 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் தாயார் பார்வதியின் இறப்பு சான்று கணினி நகல் வா.சா.ஆ–4. |
| 5 | 21.04.2025 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் தந்தை கந்தசாமியின் இறப்பு சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ–5. |
| 6 | 10.02.2024 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் பணிகொடையை வேண்டி 1–வது மனுதாரர் Accountant General (A & E) சென்னைக்கு கொடுத்த மனு அலுவலக நகல் வா.சா.ஆ–6. |
| 7 | 10.02.2024 | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் பணிகொடையை வேண்டி 1வது மனுதாரர் எதிர்மனுதாரருக்கு கொடுத்த மனு அலுவலக நகல் வா.சா.ஆ–7. |
| 8 | | இறந்து போன S.K.சீனிவாசன் என்பவரின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ–8. |
| 9 | | 1வது மனுதாரர் S.K.மணிவாணன் என்பவரின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ–9. |
| 10 | | 1வது மனுதாரர் ரவிசந்திரன் என்பவரின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ–10. |
| 11 | | 3வது மனுதாரர் பூங்கொடி என்பவரின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ–11. |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>

எனது இறந்துபோன தம்பியின் பணிப்பலன்கள் கோரி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். என் தம்பி கடந்த 29.10.2023–ல் இதய பிரச்சினை காரணமாக இறந்துவிட்டார். மேற்படி எனது தம்பி அவருடைய பணிபதிவேட்டில் அவருடைய நாமினியாக தந்தை A.S கந்தசாமி

என்பவரின் பெயரை குறிப்பிட்டுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, என் தாயார் பார்வதி பெயரை தான் குறிப்பிட்டுள்ளார். மேற்படி எனது தந்தை கந்தசாமி 11.04.2005 ல் இறந்துவிட்டார் என்று சொன்னால் என்றால் சரிதான். தாயார் பார்வதி 02.01.2020–ல் இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். நான் இந்த வழக்கில் என் அப்பா மற்றும் அம்மாவின் வாரிசு விபரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வாரிசு சான்றிதழ் இம்மனுவை தீர்மானிப்பதற்கு முக்கிய ஆவணம் என்பதால் அதை தாக்கல் செய்யாமல் நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி எனது தம்பி சீனிவாசன் மணமாகமால் இறந்துவிட்ட காரணத்தினால் அவரது வாரிசுகள் குறித்து வருவாய் துறையினரை நான் தரப்பினராக சேர்க்காமல் மனுப்படி பரிகாரம் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/– S. எழில் வேலவன்,
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.